# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

03.11.2022

**Wesite Link** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**Faceook Link** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 03-11-22

- சவாய் ஜெய் சிங், அன்னபூர்ணா மகாராணா, அமர்த்தியா சென் மற்றும் மானவ்ஜித் சிங் சந்து ஆகியோரின் **பிறந்தநாள்**.
- **அன்னபூர்ணா மகாராணா:-**
  - ✓ அவர் ஒரு முக்கிய சமூக மற்றும் பெண்கள் உரிமை ஆர்வலராகவும் இருந்தார்.
- **சவாய் ஜெய் சிங்:-**
  - ✓ ஒரு துணிச்சலான மற்றும் மிகவும் இராஜதந்திர மன்னர். இவரை 'இரண்டாம் ஜெய்சிங்' என்றும் அழைப்பர்.
- **அமர்த்தியா சென்:-**
  - ✓ 1998 பொருளாதாரத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற முதல் ஆசியர்.
- **மானவ்ஜித் சிங் சந்து:-**
  - ✓ 2006 இல், ஜாக்ரெப்பில் நடந்த உலக சாம்பியன்ஷிப்பில் ட்ராப்ஷூட்டிங்கில் தங்கப் பதக்கம் வென்றார்.
- மேஜர் சோம்நாத் சர்மா மற்றும் சிதம்பரம் பிள்ளையின் **நினைவு நாளாகவும்** அனுசரிக்கப்படுகிறது.
- **மேஜர் சோம்நாத் சர்மா:-**
  - ✓ அக்டோபர்-நவம்பர் 1947 இன் இந்தோ-பாக் போரில் பணியாற்றிய இந்திய இராணுவத்தின் குமாவோன் படைப்பிரிவின் 4 வது பட்டாலியனின் டெல்டா நிறுவனத்தின் ஒரு நிறுவன-தளபதி.
- **சிதம்பரம் பிள்ளை:-**
  - ✓ சிதம்பரம் பிள்ளை 'பேங்-பாங்' க்கு எதிரான இயக்கத்தில் சுதேசியைப் பிரச்சாரம் செய்தார்.

## மத்திய செய்திகள்

1. உர மானியம் ரூ. 51,875 கோடி மத்தியஅமைச்சரவை ஒப்புதல்

- பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் உரங்களுக்கான **ரூ.51,875 கோடி** மானியத்துக்கு மத்தியஅமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் அளித்தது
- 2022-23 ரபி பருவத்தில் அக்டோபர் 1, 2022 முதல் மார்ச் 31 2023 ஆம் ஆண்டு வரை பாஸ்பேட் பொட்டாசியம் உரங்களுக்கு நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ், சல்ஃபர் போன்ற ஊட்டச்சத்துகளை மானிய விலையில் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

- ❖ அதன்படி, **நைட்ரஜனுக்கு ரூ.98.02, பாஸ்பரசுக்கு ரூ.66.93, பொட்டாஷுக்கு ரூ.23.65, சல்ஃபருக்கு ரூ.6.12 கிலோவுக்கு** மானியமாக வழங்கப்படும்.
- ❖ இதன்மூலம் மொத்தம் ரூ.51,875 கோடி அளவுக்கு மானியம் அளிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ **எத்தனால் விலை உயர்வு:-**
  - ✓ பெட்ரோலில் கலக்கப்படும் கரும்பில் இருந்து எடுக்கப்படும் எத்தனாலின் விலையை ரூ.63.45 -லிருந்து ( லிட்டர்) ரூ. 65.61-ஆக உயர்த்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது
  - ✓ இதேபோல், **சி-ஹெவி மொலாசஸ்** முறையில் பிரித்து எடுக்கப்படும் எத்தனாலின் விலை ரூ.46.66- லிருந்து ( லிட்டர்) ரூ. 49.41-ஆகவும், பி-ஹெவி முறையில் பிரித்து எடுக்கப்படும் எத்தனாலின் விலை ரூ.59.08-லிருந்து ரூ.60.73-ஆக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது
  - ✓ தற்போது பெட்ரோலில் **10 சதவீதம் எத்தனால்** கலக்கப்படுகிறது. இதனால் வெளிநாடுகளுக்குச் செல்லவிருந்த ரூ.40 ஆயிரம் கோடி, விவசாயிகளுக்கு கிடைத்துள்ளது.
  - ✓ அடுத்த ஆண்டு முதல் எத்தனால் கலப்பை 12 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
- ❖ **விமான நிலையம் பெயர் மாற்றம்:-**
  - ✓ அருணாசலபிரதேச தலைநகர் இட்டா நகர், ஹாலோங்கியில் உள்ள பசுமை விமான நிலையத்தின் பெயரை **டோன்யி போலோ விமான நிலையம், இட்டா நகர்** என்று பெயர் மாற்றம் செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**அருணாசலபிரதேசம்**

- ✍ **தலைநகரம்:** இட்டாநகர் (நிர்வாகக் கிளை)
- ✍ **முதல்வர்:** பெமா காண்டு
- ✍ **அதிகாரப்பூர்வ விலங்கு:** கயல்

## மாநில செய்திகள்

### 1. ராஜராஜ சோழன் பிறந்த தினம் அரசு விழா

- ❖ 'மாமன்னர் ராஜராஜ சோழனின் பிறந்த தினம், அரசு விழாவாகக் கொண்டாடப்படும்' என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- ❖ மாமன்னர் ராஜராஜ சோழனின் பிறந்த தினம் ஆண்டுதோறும், சதய விழாவாக தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு அமைப்புகளால் கொண்டாடப்பட்டு வருகிறது. பிறந்த தினத்தை அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளன.
- ❖ இந்தக் கோரிக்கையை ஏற்று, இந்த ஆண்டும் இனிவரும் ஆண்டுகளிலும் ராஜராஜ சோழனின் பிறந்த தினம், அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

❖ **சதய விழா:-**

✓ உலகப் புகழ்பெற்ற தஞ்சாவூர் பெரிய கோயிலை கட்டிய மாமன்னர் ராஜராஜ சோழனின் பிறந்த தினம், ஒவ்வோர் ஆண்டும் **ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில், சதய விழாவாகக் கொண்டாடப்படுவது** வழக்கம்.

❖ நிகழாண்டு ராஜராஜ சோழனின் 1037-ஆவது சதய விழா தஞ்சாவூர் பெரிய கோயிலில் புதன்கிழமை தொடங்கியது.

## ஏவுகணை

### 1. இலக்குகளை இடைமறித்து தாக்கும் ஏடி-1 ஏவுகணை சோதனை வெற்றி

❖ இலக்குகளை இடைமறித்து தாக்கும் **ஏடி-1 ஏவுகணை** முதல்முறையாக வானில் செலுத்தப்பட்டு வெற்றிகரமாக புதன்கிழமை பரிசோதிக்கப்பட்டது.

❖ ஏடி-1 என்ற **இடைமறித்து தாக்கும் ஏவுகணை** வளிமண்டலத்தின் 100 கி.மீ. உயரத்துக்கு கீழும், அதனைத் தாண்டியும் என இருவிதமாக பாயும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

❖ இது தொலைதூரத்தில் உள்ள **பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் விமானங்களை இடைமறித்து தாக்கும்**. இந்த ஏவுகணை உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நவீன கட்டுப்பாட்டு அமைப்பு, வழிகாட்டுமுறைகளைக்கொண்டுள்ளது.

❖ இந்த ஏவுகணை **ஒடிஸாவில் உள்ள ஏபிஜெ அப்துல் கலாம் தீவின்** கடற்கரையையொட்டி, வெவ்வேறு இடங்களில் முதல்முறையாக வானில் செலுத்தி வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

## பொருளாதார செய்திகள்

### 1. கோதுமை ஏற்றுமதி ரூ.12,200 கோடி இரு மடங்கு உயர்வு

❖ நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான 6 மாதங்களில் 1.48 பில்லியன் அமெரிக்க டாலர்கள் **(இந்திய மதிப்பில் சுமார் ரூ.12,200 கோடி)** மதிப்பிலான கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் புதன்கிழமை தெரிவித்தது.

❖ முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இது **இரு மடங்குக்கும் அதிகம்** என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்தில் 630 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ.5,200 கோடி) மதிப்பிலான கோதுமை ஏற்றுமதியாகி இருந்தது.

❖ ஒட்டுமொத்த **வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின்** ஏற்றுமதி மதிப்பு இந்த 6 மாதத்தில் **25 சதவீதம்** அதிகரித்துள்ளது.

❖ முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்தில் 11.05 பில்லியன் அமெரிக்க டாலர்களாக (ரூ.91 ,000 கோடி) இருந்த ஏற்றுமதி, இப்போது 13.77 பில்லியன் அமெரிக்க டாலர்களாக (சுமார் ரூ.1 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது.

## நியமனம்

### 1. சிஆர்பிஎஃப் பெண் அதிகாரிகள் முதல்முறையாக ஐ.ஜி.யாக நியமனம்

❖ மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் (சிஆர்பிஎஃப்) கலவரத் தடுப்பு சிறப்புப் பிரிவான அதிவிரைவுப் படை (ஆர்ஏஎஃப்) ஐ.ஜி.யாக முதல்முறையாக பெண் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ அதேபோல், சிஆர்பிஎஃப்-இன் பிகார் பிரிவுக்கும் முதல்முறையாக பெண் ஐ.ஜி. நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ நாட்டின் மிகப்பெரிய துணை ராணுவப் படையான சிஆர்பிஎஃப்-இல் (3.25 லட்சம் பணியாளர்கள்), பல ஆண்டு காத்திருப்புக்கு பிறகு கடந்த **1987-ஆம் ஆண்டில் முதல் முறையாக பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.**

❖ இந்நிலையில், சிஆர்பிஎஃப் அதிவிரைவுப் படை ஐ.ஜி.யாக பெண் அதிகாரி **ஆனி ஆப்ரஹாம்**, பிகார் பிரிவு ஐ.ஜி.யாக **சீமா துந்தியா** ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக, அப்படையின் தலைமை அலுவலகம் வெளியிட்ட ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ அதிவிரைவு படைக்கு பெண் ஐ.ஜி. தலைமை தாங்குவது இதுவே முதல்முறையாகும்.

❖ இவ்விருவரும் கடந்த 1987-இல் முதல்முறையாக சிஆர்பிஎஃப் பணியில் இணைந்த பெண் அதிகாரிகள் பிரிவைச் சேர்ந்தவர்களாவர்.

❖ **ஐ.நா.வில்** இந்திய பெண்கள் காவல் குழுவுக்கு ஏற்கெனவே தலைமை தாங்கிய இவர்கள், சிறந்த பணிக்கான குடியரசுத் தலைவர் **காவல் பதக்கத்தையும்** பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**சிஆர்பிஎஃப்(CRPF)**

✍ **தலைமையகம்:** புது தில்லி

✍ **உருவாக்கப்பட்டது:** 27 ஜூலை 1939; (கிரவுன் பிரதிநிதியின் காவல்துறையாக); 28 டிசம்பர் 1949; 72 ஆண்டுகளுக்கு முன்பு

## உலக செய்திகள்

### 1. ட்விட்டரில் 'ப்ளூ டிக்' பெற மாதம் ரூ. 662 கட்டணம்

❖ ட்விட்டர் பயன்பாட்டாளர்களின் அங்கீகரிக்கப் பட்ட கணக்கை குறிப்பிடும் நீல நிற குறியை ப்ளூ (டிக்) பெற மாதம் **8 அமெரிக்க டாலர் (ரூ.662)** கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்று அதன் புதிய உரிமையாளர் எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

- போலிகணக்குகளைத்தடுக்க ட்விட்டர் நடவடிக்கை எடுப்பதில்லை என்ற நீதிமன்ற விமர்சனத்துக்கு உள்ளான பிறகு **2009-இல் ப்ளூ டிக்**' சேவையை அந்த நிறுவனம் தொடங்கியது.

## 2. இஸ்ரேல்: மீண்டும் பிரதமராகிறார் நெதன்யாகு

- இஸ்ரேலில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலின் வாக்கு கணிப்பு முடிவுகள், ஆளும் லிகுட் கட்சி அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிப்பதால், அந்த நாட்டின் **பிரதமர் நெதன்யாகு** மீண்டும் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ஏற்கெனவே இஸ்ரேலில் **அதிக காலம் பிரதமராக இருந்தவர்** என்ற சாதனையைப் படைத்துள்ள நெதன்யாகு. ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பிரதமராவது ஏறத்தாழ உறுதியாகியுள்ளது.